**தலைப்பு 281 - கமநல அபிவிருத்தி திணைக்களம்**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 281 - கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

**1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட:டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் ரோகவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

**1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.
-

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**
**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்றுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கின் திணைக்கள கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூபா 442,512,841 ஆக இருந்த போதிலும் தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பில் அந்த மீதி ரூபா 439,016,164 ஆக இருந்ததனால் ரூபா 3,496,677 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இந்த வித்தியாசம் நீண்டகாலமாக காணப்பட்டுவரும் அடையாளங்காணமுடியாத வரவு மீதியானதுடன் 2024 ஆம் ஆண்டின் போது அதில் தீர்த்துவைக்கப்பட்டுள்ள மீதியை அடையாளங்கண்டு ஏடுகளிலிருநது நீக்கப்பட்டுள்ளதுடன் அது கட்டுப்பாட்டு கணக்கிற்கு அந்த உரிய ஆண்டுகளிலேயே செலவு வைக்கப்பட்டுள்ளதனால் கட்டுப்பாட்டு கணக்கிற்கு மீண்டும் செம்மையாக்க முடியாது இ.ந்த விடயம் சம்பந்தமாக கமத்தொழில் அமைச்சு மற்றும் நிதி அமைச்சிடமிருந்து பெற்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | மீதிகளை வபைகப்படுத்தும் பொழிப்பில் வித்தியாசத்தினை அடையாளங்கண்டு தீர்த்துவைத்தல் வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2023 நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆண்டின் இறுதி மீதியினை 2024 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மீதியாக | தற்பொழுது சொத்துக்கள் கோவையின் பிரகாரம் ஆரம்ப மீதியும் திறைசேரி அறிக்கையின பிரகாரம் ஆரம்ப மீதியும் சரியாக | நிதியற்ற சொத்துக்களின் மீதியை துரிதமாக சரியாக கணக்கீடு |

| | | |
|---|---|---|
| முன்கொண்டு வரும் போது ரூபா 10,864,561,544 அதிகரித்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான தொழில்நுட்ப குறைபாடுகள் இடம்பெறாத வகையில் 26 உப அலுவலகங்களுக்குரிய மாதாந்த சொத்துக்கள் கோவையை திறைசேரிக்கு அறிக்கையிடுவதற்கு முன்னர் பரீட்சித்து பார்த்து உரிய திரண்ட சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செய்தல் வேண்டும். |

**(இ) கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஏனைய வருமானத் தலைப்பிற்காக அறிக்கையிடுகின்ற நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட ரூபா 624,073,225 தேறிய வருமானம் கட்டுநிதி கணக்கிணக்க கூறறின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு பெறுவனவுகள் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி கணக்கிணக்க கூற்றின் மீதி அப்பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | இது நிதி செயலாளற்றல் கூற்றில் ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு பெறுவனவுகள் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு கொடுப்பனவுகள் விடயமாக பெறுமதியை காட்டுவதற்கு இடம் வைக்கப்பட்டுள்ளதனால் அப்பெறுமதி நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டன. 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்படாது கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானங்களும் செலவுகளும் நிதிக்கூற்றுக்களில் சரியாக காடட்டப்படுதல் வேண்டும். |

## 2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச'சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகபள் அமலப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய அண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | அமுல்பப்டுத்தப்படாத சிபாரிசு | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.2.2. | நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆண்டின் இறுதி மீதியினை ஆண்டின் ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்தல் வேண்டும். | 1.6.1(ஆ) |
| 1.6.1.3(ஆ) | திணைக்கள கட்டுப்பாட்டு கணக்கின் மீதியினதும் தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் மீதியினதும் வித்தியாசம் சரிசெய்யப்படுதல் வேண்டும். | 1.6.1(அ) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் களஞ்சியம், உணவுச்சாலை, சுற்றுலா விடுதிகள் என்பன முறையாக உடன்படிக்கை செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ளாது ஊழியர் நலன்புரிச் சங்கங்களுக்கும் கமநல சேவை நிலையங்களுக்கும் அவற்றின் வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளித்ததன் காரணமாக அரசாங்கதிற்கு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட வருமானங்கள் இழக்கப்பட்டிருந்தன. | திணைக்களத்தின் களஞ்சியம், உணவுச்சாலை, சற்றுலா விடுதி என்பவற்றை பராமரித்தல் மற்றும் திருத்தம் செய்யும் நடவடிக்கைகளைப் போல ஊழியர்களை ஈடுபடுத்தும் நிருவாக நடவடிக்கைகளுக்காக திரண்ட நிதியத்திலிருந்து நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தலும் இடம்பெறுவதில்லை.<br><br>குழு நிதியத்தின் மூலம் அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளும் திருத்தம் செய்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். எனவே உரிய பராமரிப்பு செலவுகளை மீளளிப்புச் செய்வதற்காக அந்த சுற்றுலா விடுதிகளின் வருமானத்தை குழு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் ஒர நடைமுறையை தயாரித்து அதன் வருமானத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்களை முறையாக உடன்படிக்கை செய்வதன் மூலம் வெளித்தரப்பினர்களுக்கு ஒப்படைப்பதற்கும் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| பாரம்பரிய விவசாயிகளை கமத்தொழில் தொழில் முயற்சியாளர்களாக மாற்றி ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு கமத்தொழில் நடவடிக்கைகளில் விவசாயிகளை ஈடுபடுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் குருனாகல் மாவட்டத்தில் சுகுரு விவசாய கிராம நிகழ்ச்சித்திட்டம் | நாகொல்லாகம கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பசுமை இல்லங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் 2025-06-02 ஆந் திகதி தலைமை அலுவலகத்தில் கமநல அபிவிருத்தி ஆணையாளரின் தலைமையில் மு.பகல் 10.00 மணிக்கு நடாத்துவதற்கு ஆயத்தப்பட்டுத்தப்பட்டுள்ளது. | பசுமை இல்லங்களை நிர்மாணிக்கும் போது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் யூலை 25 ஆந் திகதி கமநல அபிவிருத்தி திணைக்களம் 02 தனியார் நிறுவனங்களுடன் உருவாக்கி கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இணங்க பசுமை இல்லங்களை நிர்மாணித்தல், விளைச்சலினை கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்தல், கமத்தொழில் ஆலோசனைகளை விவசாயிகளுககு வழங்குதல் என்பவற்றிற்கு இணக்கப்பாடு உருவாக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க நாகொல்லாகம கமநல சேவை அதிகாரப் பிரதேத்திலுள்ள 21 விவசாயிகளுக்கு 21 பசுமை இல்லங்களை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தின் பங்களிப்பாக ரூபா 10,500,000 தொகை உரிய கமநல சேவை குழுக்களுக்கும் விவசாயிகளின் பங்களிப்பு பணம் கமநல வங்கியிலும் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் பசுமை இல்லங்கள் நிர்ணயிக்கப்பட்ட விபரக் குறிப்புக்களுக்கு இணங்க நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக ஒப்பந்த கம்பனிக்கு பணம் செலுத்தப்படவில்லை. அவ்வாறே 2024 ஆம் ஆண்டின் போது 14 விவசாயிகளுக்கு பசுமை இல்லங்களை நிர்மாணிப்பதற்காக 2024 யூன் 04 ஆந் திகதி ரூபா 18,000,000 நிதி ஏற்பாடு கிடைத்திருந்தும் எந்த பசுமை இல்லமும் நிர்மாணிக்கப்படாது அதில் ரூபா 236,977 செலவு செய்து மிகுதியான ரூபா 17,763,023 நிதி ஏற்பாடு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இச்செயற்திட்டத்தின் மூலம் உரிய குறிக்கோளை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது.

அக்கலந்துரையாடலின் தீர்மானங்களின் பின்னர் அந்த நிர்மாணக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் இருக்குமாயின் செலுத்துவதற்காக மற்றும் மிகுதிப் பணம் காணப்படுமாயின் அரசாங்க வருமானத்திற்கு செலவுவைக்குமாறும் ஆலோசானை வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட பசுமை இல்ல நடவடிக்கைகளை 2025-06-15 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**3.3 கணக்கீட்டு உத்தியோகத்ரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் விளைதிறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வினை மேற்கொண்டு அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதான வெளிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்பட்டு வருவதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இன்றுவரை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.ன | திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிறகாக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்துதல் வேண்டும். |

**3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி**<br>**ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (அ) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல | | முன்னேஸ்வரம் கமநல சேவை அதிகாரப் | ஆணையாளர் நாயகத்தின் அல்லது உரிய | வயல் காணியை நெற் பயிர்ச் செய்கையினை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 30(2),(3), 32(1) மற்றும் 33(1) ஆம் பிரிவுகள் | | பிரதேசத்தைச் சேர்ந்த பன்னிரண்டு பிரிவுகளில் மேற்கொண்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது 125.5 ஏக்கர் வயல் காணிகளை நெற்பயிர்செய்கையினைத் தவிர்த்து ஏனைய பயிர்ச் செய்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு ஆணையாளர் நாயகத்தின் எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி பிரதி/ உதவி ஆணையாளரின் அல்லது உரிய கமநல அபவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரின் எழுத்துமூல அங்கீகாரமின்றி ஏதாவது வயல்காணி நெற் பயிர்ச் செய்கையினைத தவிர்த்து வேறு பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்திய) அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான சட்ட நடவடிக்கை எடுத்தலானது உரிய பிரதி/ உதவி ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும். | தவிர்த்து ஏனைய பயிர்ச் செய்கைக்காக ஈடுத்தும் போது முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசின் தாபன விதிக் கோவை I ஆம் பகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு மற்றும்மற்றும் நடைமுறை சட்ட விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயம் | 4,025,535 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேவையை கைவிட்டுச் சென்றுள்ள 71 உத்தியோகதர்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4.02 மில்லியன் கடன் அறவிடப்பட்டிருக்காததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு முன்னர் சேவையை கைவிட்டுச் சென்ற 40 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட | தீர்த்துவைக்கப்படாத மீதியை தீர்த்துவைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக DAD/FIN/SAL/2/1 ஆம் இலக்க 2025-03-21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மாவட்ட அலுவலகங்களிடமிருந்தும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்தும் குடியிருக்கும் | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வேண்டிய கடன் மீதி ரூபா 2.25 மில்லியனாகும். | தகவல்கள் விசாரிக்கப்பட்டுள்ளன. | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | நி.பி 571 | 25,353,990 | இரண்டு ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் இரண்டு ஆண்டுகளை மிகைத்த ரூபா 25.35 மில்லியன் வைப்புக்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் இரண்டு ஆண்டுகளை மிகைத்த பெறுமதிக்குரிய வேண்டுதல்களை மூன்றாந் தரப்பினர்களிடமிருந்து பெற்று திறைசேரியிடமிருந்து கட்டுநிதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலங்கடந்த வைப்புக்களை தீர்த்துவைத்தல் வேண்டும். |
| (ஈ) | 1997 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நி.பி 750(1) | | அனைத்து குளாம் வாகனங்களிலும் அரசாங்க இலச்சினை மற்றும் திணைக்களத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் எந்த குளாம் வாகனத்திலும் அவ்வாறு அரசாங்க இலச்சினை மற்றும் திணைக்களத்தின் பெயர் பொறிக்கப்படவில்லை. | அனைத்து குளாம் வாகனங்களிலும் அரசாங்க இலச்சினையையும் நிறுவனத்தின் பெயரையும் பொறிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அனைத்து குளாம் வாகனங்களிலும் அரசாங்க இலச்சினையும் திணைக்களத்தின் பெயரும் பொறிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | கொம்ப்ட் ரோலர் ஜெனரால் அலுவலகத்தின் 2024 மே 20 ஆந் திகதிய CGO/NFAMS/01/03 ஆம் இலக்க | | திணைககளத்தின் 16 வாகனங்களை 2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்ப்புச் செய்யுமாறு காட்டப்பட்டிருந்தும் அவற்றில் 03 | 16 வாகனங்களில் 08 வாகனங்கள் கைதவிர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. | வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| கடிதம் | | வாகனங்களை இன்னும் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் அன்றி வேறு எந்த வகையிலும் புதிய நிதியத்தை உருவாக்குதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் நி.பி 876(3) இன் பிரகாரம் நியதிச்சட்டமற்ற நிதியம் உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு அவற்றின் காசு மீதிகள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் நியதிச்சட்டமற்ற ஒரு நிதியத்தினை தொடர்ந்தும் பேணுவதற்கு நியாயமான காரணம் இருக்குமாயின் அவ்வாறான நிதியத்தை பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் விவசாய வங்கி நிதியம் சம்பந்தமாக கணக்காய்வுத் திகதி வரை அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 75 மில்லினும் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 311 மில்லியனும் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 50 மில்லியனும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு ரூபா 29.92 மில்லியன் வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | நியதிச்சட்டமற்ற நிதியத்தை மூடுவது அல்லது தொடர்ந்து பேணுவது சம்பந்தமாக நிதி அமைச்சின், அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தில் 2025-01-09 ஆந் திகதி நடைபெறற கூட்டுத்தின் போது விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பாகவும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது. அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எதிர்கால செயலாற்றலினை அடிப்டையாகக் கொண்டு விவசாயிகள் வங்கி கணக்கின் எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிதிப்பிமாணத்தின் பிரகாரம் நியதிச்சட்டமற்ற நிதியத்தை இரத்துச் செய்வதற்கு அல்லது சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நித சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பந்திகளின் பிரகாரம் விவசாயிகள் வங்கி நிதியத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகை திட்டத்திற்காக அமைச்சு செயலாளரின் முறையான அங்கீகாரமின்றியும் உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் திணைக்களத்தினால் விவசாயிகள் வங்கி நிதியத்திலிருந்து ரூபா 8,272,268 தொகையான நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தலும் ரூபா 4,412,001 | 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கைக்கு இணங்க ஒரு புதிய கணக்கினை திறப்பதற்கு 2000 செப்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி கமத்தொழில் மற்றும் காணி அமைச்சினால் வழங்கப்பட்டைள்ள கையேடு - I இன் 6.2 ஆம் அத்தியாயத்தின் மூலம் கமத்தொழில அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையான திருத்த செலவு செய்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அதிகாரத்திற்கு இணங்க கமநல வங்கி (முன்னோடி) செயற்திட்டத்திற்கு மூலதனத்தை வழங்கி பெற்ற 01 சதவீத வருமானம் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மற்றும் கமநல வங்கியின் கணக்கில் அங்கீகரித்த தலைப்பு விபரத்தின் அடிப்படையில் செலவு செய்யப்பட்ட முறைமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

### 3.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாத்தறை, குருனாகல், இரத்தினபுரி ஆகிய மாவட்ட அலுவலகங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சிபாரிசு இல்லாததன் காரணமாக ஒப்பந்த நிறுத்திவைத்தல்களாக (16/9) ரூபா 5.86 மில்லியன் தொகை 02 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்டு வருவதுடன் உரிய ஒப்பந்தங்களில் குறைபாடு இருக்குமாயின் அக்குறைபா்டுகளை பூரணப்படுத்திக்கொண்டு உரிய நிறுத்திவைத்தல் பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 07 நாட்களுக்குள் நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவுவைத்து முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்ணயிக்கப்பட்டவாறு ஒப்பந்த நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிப்பு செய்தல் வேண்டும். |

### 3.7 வங்கி கணக்கு செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 188(2) மற்றும் (3) இன் பிரகாரம் பணத்தை வங்கியில் வைப்புச் செய்யும் போது அதற்காக வங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கும் வங்கி கூற்றில் அப்பணம் சரியாக செலவுவைக்கப்பட்டுள்ளதா என்பதனை பரீட்சித்துப்பார்ப்பதற்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் சான்றுபடுத்துதல் வேண்டும். இதற்கிணங்க 03 மாவட்ட அலுவலகங்களின் திசெம்பர் மாத வங்கி கணக்கிணக்க கூற்றினை பரீட்சித்து பார்த்த போது மொத்த | நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் ரூபா 8,802,877 பெறுமதியான பெறுவனவுகள் தற்பொழுது அடையாளங்காணப்பட்டுள்ளது டன் எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்டும். | பணத்தை வங்கியில் வைப்புச் செய்வதனைப் பரீட்சிதது சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி ரூபா 8.80 மில்லியனான பெறுவனவுகள் சம்பந்தமாக மேற்கூறிய நிதிப் பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் காசோலைகளை வழங்கிய திகதி அதனை செல்லுபடியாக்கிய திகதி ஆகிய இரண்டில் பின்னர் வருகின்ற திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் அது பணமாக்கப்படாதிருக்குமாயின் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 07 மாவட்ட அலுவலகங்களின் மொத்த பெறுமதி ரூபா 786,396 ஆன 44 காசேலைகள் சம்பந்தமாக மேற்கூறிய நிதிபபிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 786,396 தொகையான 44 காசோலைகள் சம்ப்தமாக எதிர்காலத்தில் நிதிப்பிரமாணம் 396 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | காசோலைகள் வழங்கும் போது கவனமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை வங்கியின் 7042345 ஆம் இலக்க வங்கி கணக்கில் 2024 திசெம்பர் மாதத்தின் வங்கி கணக்கிணக்க கூற்றுக்களின் பிரகாரம் மொத்த பெறுமதி ரூபா 5.37 மில்லியனான 16 காசோலைகளை அடையாளங்கண்டு கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுக்காது அடையாளங்காணாத பெறுவனவுகளாக காட்டப்பட்டிருந்தது. | ரூபா 5,378,964 தொகையான அடையாளங்காணாத 16 பெறுவனவுகளுக்கு மத்தியில் ரூபா 1.43 மிலலியன் பெறுமதியான 02 பெறுவனவுகளை தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதிப் பெறுமதியான ரூபா 3.94 மில்லியனான அடையாளங்காணாத 14 பெறுவனவுகளை அடையாளங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வங்கி பெறுவனவுகளை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க வயல்காணிகளில் குறுங்கால உப பயிர்களை பயிரிடும் செயற்திட்டத்தின் கீழ் 600 ஏக்கர்களில் பயிர்ச் செய்கை செய்வதற்கு ரூபா 12.48 மில்லியன் நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டு அதில் ரூபா 10.21 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அதன் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | விடுவிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க சிறு நீர்ப்பாசன பராமரிப்பு நிதியம் 200 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின போது ரூபா 16.7 மில்லியன் நிதி ஏற்பாட்டினை விடுவித்து ரூபா 16.3 மில்லியன் செலவு செய்யப்பட்டிரந்த போதிலும் அதில் 167 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. திட்டமிடப்பட்ட 200 செயற்திட்டங்களில் 33 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | மாவட்டங்களிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட 33 செயற்திட்டங்கள் வழிகாட்டிக் கோவை அறிவுறுத்தல்களுக்கு இணக்கமற்றுள்ளதனால் அங்கீகரிக்கப்படாத செய்றதிட்டங்கள் அமுல்ப்படுத்தப்படவில்லை. அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் தற்பொழுது அறிக்கையிடப்பட்டுள்ளது. | அங்கீகரித்த செய்றதிட்டங்களை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அதன் செயலமுன்னேற்றம் அறிக்கையிடப்படுதல் வேண்டும். |
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க சுகுரு மாதிரி விவசாய கிராம நிகழ்ச்சித்திட்டத்தை 19 மாவட்டங்களில் அமுல்ப்படுத்துவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தும் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய வருடாந்த பௌதிக இலக்குகளின் அளவு திருத்திய செயல் நடவடிககைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாது மீளாய்வாண்டின் போது ரூபா 263 மில்லியன் நிதி ஏற்பாடு விடுவிககப்பட்டு அதில் ரூபா 67.1 மில்லியன் செலவு செய்து 18 பசுமை இல்லங்களின் நிர்மாணங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் 07 பசுமை இல்லங்களை நிர்மாணிக்கும் செயல்முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்ததுடன் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த மிகுதியான 11 பசுமை இல்லங்களின் செயல்முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சுகுரு விவசாய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்ட செயற்திட்டங்கள் 2025-06-15 ஆந் திகதியில் வேலையை முடிவு செய்வதற்கு நிர்ணயித்துள்ளது. | செயல்நடவடிககைத் திட்டத்திற்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் இலக்கிடப்பட்ட பசுமை இல்லங்களை பூரணப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க டிஜிடல் வயல் காணிகள் பெயர்ப்பட்டியலினைத் தயாரிக்கும் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 1,600,000 வயல் காணிகளைப் பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 30 மில்லியன் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து அதற்காக ரூபா 26.05 மில்லியன் நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஏற்பாடு செய்த பணத்தில் ரூபா 25.06 மில்லியன் அல்லது 96 சதவீதம் செலவு செய்து பதிவு செய்யப்பட்ட வயல் காணிகளின் அளவு 38,495 ஆக இருந்ததுடன் அது இலக்கிடப்பட்ட அளவில் 2.4 சதவீதத்திற்கு குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | டிஜிடல் வயல் காணிகள பெயர்ப்பதிவேட்டினைத் தயாரிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டின் போது 120,875 KML கோவைகள் பரீட்சிக்கப்பட்டதுடன் ரூபா 24.17 மில்லியன் நிதி ஏற்பாடாக விடுவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க இலக்கிடப்பட்ட டிஜிடல் வயல் காணிகள் பெயர்ப் பதிவேட்டினைத் தயாரித்தல் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பெரசூட் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 21 மாவட்டங்களில் 10,000 ஏக்கர் பயிர்ச்செய்கைக்காக ரூபா 241.4 மில்லியன் நிதி ஏற்பாடு விடுவிககப்பட்டிருந்தும் ரூபா 63.6 மில்லியன் அல்லது நிதி ஏற்பாட்டில் 26 சதவீதம் செலவு செய்து 613 ஏக்கர்கள் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்ததுடன் அது பயிரிடுவதற்கு இலக்கிடப்பட்ட ஏக்கர் அளவில் 6.3 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | 2024/25 பெரும் போகத்தில் பெரசூட் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 19 மாவட்டங்களுக்கு 2128 ஏக்கர்களாக 3,559,936 பெரசூட் நாடாக்களுக்காக ரூபா 240.80 மில்லியன் நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பெரசூட் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகள் பூரணப்படுத்தப்படுத ல் வேண்டும். |
| (ஊ) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க வெட்டுப் பூக்கள் பயிர்ச்செய்கைக்கான பாதுகாப்பு இல்லத்தை தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 31.04 மில்லியன் நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டு அதில் ரூபா 29.92 மில்லியன் பணம் அல்லது 96 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்தும் தயாரிப்பதற்கு ஆரம்பம் செய்யப்பட்ட 30 பாதுகாப்பு இல்லங்களை ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெட்டுப் பூக்கள் பயிர்ச் செய்கைக்கான பாதுகாப்பு இல்லங்களை தயாரிக்கும் செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் விவசாயிகளால் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க வெட்டுப் பூக்கள் பயிர்ச் செய்கை செயற்திட்டத்தின் இலக்குகளை பூரணப்படுத்துதல் வேண்டும். |
| (எ) | குருனாகல் மாவட்டத்தில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வயல் காணிகளாக ஆவணப்படுத்தப்பட்ட காணிகளுக்கு மத்தியில் A தொகுதியைச் சேர்ந்த 590.30 ஏக்கர் தரிசு நிலங்களும் B தொகுதியைச் சேர்ந்த 232.465 ஏக்கர் தரிசு நிலங்களும் C தொகுதியைச் சேர்ந்த 833.78 ஏக்கர் தரிசு நிலங்களும் அடையாளங் காணப்பட்டிருந்தும் உரிய வயல் காணிகளில் மீண்டும் பயிர்ச்செய்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தரிசுக் காணிகளை அடையாளங்காண்தல் 2023 பெரும்போகத்தின் போது இடம்பெற்றதுடன் அக்காலத்தில் ஏனைய வயல் காணிகளின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட்டிருந்ததன ால் அப்போகத்தின் போது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | தரிசுக் காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் இலக்குகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | தரிச் காணிகளில் சாகுபடி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குருனாகல் மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டின் போது 27 நிலையங்களில் 215 ஏக்கர் அளவில் சாகுபடி செய்வதற்காக ரூபா 8.06 மில்லியன் மாவட்ட அலுவலகங்களால் செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவற்றில் 11 நிலையங்களின் 24.3045 ஏக்கர் வயல் காணிகளில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாது செலவு செய்யப்பட்ட ரூபா 1.62 மில்லியன் தொகை ஒரு விளைவற்ற செலவாக இருந்தது. | இயற்கையான இடர் நிலைமையின் அடிப்படையில் இக்காணிகளின் பயிர்ச்செய்கை அழிவடைந்ததன் காரணமாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் இயலுமை இல்லை. | தரிசுக் காணிகளில் சாகுபடி செய்யும் இலக்குகளை பூரணப்படுத்துதல் வேண்டும். |

## 4.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தினைப் பெற்றுக்கொள்ளாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நவீன தொழில்நுட்பத்தை கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தை இலக்காகக் கொண்டு கமத்தொழில் பயிர்ச்செய்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகிய பல்வேறு குறிக்கோள்களுடன் விவசாய தொழில் முயற்சியாளர்களை நோக்கமாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டின் போது சுகுரு கிராமிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பணப் பயிரகளுக்காக தானியங்கி உணரிகளுடன் பசுமை இல்லங்களை நிர்மாணிப்பதற்காக 02 கமநல சேவை அதிகாரப் பிரதேசங்களின் 13 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இப்பசுமை இல்லங்களை நிர்மாணிப்பதற்காக ஒரு விவசாயிக்கு அரசாங்கத்தின் பங்களிப்பாக ரூபா 500,000 தொகையும் விவசாயின் பங்களிப்பாக ரூபா 500,000 தொகையுமாக செலவு செய்து ரூபா 1,000,000 பெறுமதியான பசுமை இல்லம் நிர்மாணிக்க வேண்டியிருந்தது. 2023 திசெம்பர் 29 ஆந் திகதி அனைத்து கட்டுநிதிகளும் விடுவிக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் கொடுப்பனவுகளை முடிவு செய்யுமாறு தெரியப்படுத்தியிருந்ததுடன் அதற்கிணங்க கமநல அபிவிருத்தி மாவடட அலுவலகங்களால் உரிய நிர்மாணங்களை பூரணப்படுத்தாதிருந்தும் அப்பணம் உரிய கமநல சேவை குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் இந்த விவசாயிகளின் அறுவடையை கொள்வனவு செய்வதற்கு ஒரு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்திருந்தும் 2024/2025 ஆண்டுகளின் போது விவசாயிகளின் அறுவடை அந்த நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறிய உடன்படிக்கை செய்த நிறுவனத்தினால் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்திய App மென்பொருளும் உரிய நிறுவனத்தினால் 04 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் விவசாயிகளின் அறுவடையை விற்பனை செய்வதற்கு | சுகுரு விவசாய கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பணப் பயிர்களுக்காக தானியங்கி உணரிகளுடனான பசுமை இல்லங்களை நிர்மாணிப்பதற்காக கமநல அபிவிருத்தி திணைக்களம், Sri Lanka Agripreneurs Forum மற்றும் Agro World (Pvt) Ltd ஆகிய 03 நிறுவனங்கள் உடன்படிக்கை செய்து இச்செயற்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ள APP மென்பொருளிலிருந்து சேவையை பெற்றுக்கொள்வதற்காக நிர்மாண வேலைகளை அவதானித்தல் மற்றும் நிர்மாணத்தின் பின்னர் பயிர் ஆலோசனை சேவைக்காக Agro World (Pvt) Ltd ஆகிய நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்தல் வேண்டும்./ இக்கொடுப்பனவு நடவடிக்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக இந்த App மென்பொருள் செயற்படவில்லை. இந்த பசுமை இலலத்தினை துரிதமாக நிர்மாணித்து முடிவுறுத்துமாறு நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுகுரு கிராமிய செய்றதிட்ட நிகழ்ச்சித்திட்டத்தீனை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

முடியாமையின் காரணமாக 2024 ஆம் ஆண்டின் இறுதியளவில் சுகுரு கிராமிய நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய மென்பொருள் முறைமை செயற்படவில்லை என விவசாயிகள் தெரிவித்திருந்தனர். அதற்கிணங்க செயற்திட்டத்தின் குறிக்கோளான ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்ட கமத்தொழில் பயிர்ச்செய்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் இச்செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது. கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கும் உரிய நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தும் அந்த புரிந்துணர்வு உடன்படிக்கை மீறப்பட்டிருந்தும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் உரிய நிறுவனம் சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் 47(4) அம் உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை நிதி ஆண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடுதல் வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையில் குறிப்பிட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்க வேண்டி இருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களம் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆம் அண்டிற்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன் தற்பொழுது அச்சிடுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையும் அமைச்சு அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

## 4.4 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| உலக வங்கியின் உதவியின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளின், துறைசார் விவசாயிகளின் பயிர்களை களஞ்சியப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 8.71 மில்லியன் செலவு செய்து ஆறு மாவட்டங்களில் 900 மெட்ரிக்தொன் கொள்ளளவினைக் கொண்ட 11 களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்பட்டு கமநல சேவை நிலையங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்களஞ்சியங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் களஞ்சியத்தை நிர்மாணித்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. தேவைப்பாட்டினை அடையாளங்காணாது களஞ்சியத்தினை நிர்மாணித்தல் இதற்கு காரணமாக இருந்தது. மேலும் அனுராதபுரம் மதவாச்சி கமநல சேவை நிலையத்தில் ரூபா 2.46 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட களஞ்சியத்தின் நிர்மாண நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதவாச்சி ஏனைய துறைசார் பயிர் களஞ்சியத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டமானது மூலப் பொருட்களின் விலை அதிகரித்தல் விலை மாற்றமடைதல் ஆகிய பிரச்சினையான சுழ்நிலையினை முன்னிட்டு அத்திவாரம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு இடைநடுவில் நிறுத்த வேண்டி ஏற்பட்டது. உரிய ஒப்பந்தக்காரரினால் CIDA Formula விலை மாற்றத்திற்கு இணங்கி 2023-03-31 ஆந் திகதியில் வேலையை முடிவுறுத்த முடியாததனால் செயற்திட்டத்தினை முடிவுறுத்துவதற்காக காலத்தை நீடிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு கமத்தொழில் அமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்படாததுடன் பொருத்தமான நிதி மூலத்தை ஈடுபடுத்தி செயற்திட்டத்தை பூரணப்படுத்துமாறு அமைச்சு ஆலோசனை வழங்கியிருந்தது. எனவே கமதொழில் அமைச்சின் ஆலோசனை மற்றும் அங்கீகாரத்திற்கு இணங்க மேற்கூறிய செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டது. அதற்கிணங்க எதிர்காலத்தில் புதிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக நிதி எற்பாட்டினை பெறுகையில் மேற்கூறிய செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணிக்கப்பட்ட களஞ்சியத்தினை உச்ச அளவு இயலளவுடன் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மொனராகலை மாவட்ட கமநல அபிவிருத்தி அலுவலகத்தின் 03 வாகன, இயந்திர விடயங்கள் பயன்பாட்டிற்கு எடுத:தக் கொள்ளப்பட்டிருக்காததுடன் புத்தளம் மாவட்டத்தில் 12 கமநல சேவை நிலையங்களின் அரசாங்க இல்லங்களுக்கு மத்தயீல் 09 இல்லங்கள் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் காணப்பட்டதுடன் அவற்றினை திருத்தம் செய்யாததனால் 05 இல்லங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | 51-7005 ஆம் இலக்க கெப் வாகனம் திருத்தம் செய்யும் நடவடிககைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. உத்தியொகபூர்வ இல்லத்தை திருத்தம் செய்வதற்காக கடந்த ஆண்டுகளின் போது வேண்டிக்கொண்ட நிதி ஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக திருத்தம் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதிருந்தது. இந்த ஆண்டிற்கான நிதி ஏற்பாடுகளிலிருந்து திருத்தம் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது டன் உரிய நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் திருத்தம் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்படும். | திருத்தம் செய்ய வேண்டிய சொத்துக்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் திருத்தம் செய்ய வேண்டும். |
| (ஆ) | நாரஹேன்பிட மத்திய களஞ்சியத்தில் டயர் பற்றாக்குறை சம்பந்தமாக நி.பி 104(1) ''அ'' விசாரணை தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அவதானிப்புக்களுக்கு இணங்க நி.பி 105 இன் கீழ் 25 சதவீதமான மிகைக்கட்டணம் சேகரிக்கப்பட்டதன் பின்னர் முழு நட்டத்தின் பெறுமதி ரூபா 3.37 மில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே களஞ்சிய பொறுப்பாளரினால் தொடக்க புலனாய்வுக் குழுவிற்கு அவரினால் எழுத்துமூலம வழங்கிய டயர் தொடர்பான பற்றாக்குறை ஏற்றுக்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கையின் சிபாரிசுக்கு இணங்க இந்த நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய நாரஹேன்பிட மத்திய களஞ்சியத்தின் களஞ்சிய பொறுப்பாளரிடமிருந்து ஒரே தடவையில் பணத்தை அறவீடு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் 2024 அகஸ்ட் 16 ஆந் திகதி வரை அந்த நட்டம் உரிய | தொடக்க புலனாய்வின் சிபாரிசுக்கு இணங்க உத்தியோகத்தருக்கு எதிரான குற்றப் பத்திரம் வரைபாக்கப்பட்டு ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2024-03-12 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. அவ்வாறே நி.பி 104 இன் பிரகாரமான விசாரணை அறிக்கையும் 2024-05-30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் ஏற்பட்ட நட்டம் ரூபா 3.37 மில்லியன் என அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. அப்பணத்தை முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. உரிய பணத்தை செலுத்துமாறு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | பற்றாக்குறையானது உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | விடத்திற்குரிய டயர் காணாமல் போனமை சம்பந்தமாக நாரஹேன்பிட பொலிசுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் 2025-05-20 ஆந் திகதி வரையும் சந்தேகத்திற்குரியவர் கைது செய்யப்பட்டிருக்காததனால் புலனாய்வு நடவடிக்டகைகளை துரிதமாக நிறைவேற்றுமாறு கொழும்பு தெற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு 2025-05-20 ஆந் திகதி தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | மேல்மாகணா விவசாயத் திணைக்களம், களுத்துறை மாவட்ட கமநல அபிவிருத்தி அலுவலகத்தின் மூலம் கமநல சேவை நிலையத்திற்கு 2006 ஆம் ஆண்டின் போது வழங்கியிருந்த 16 கைஉழவு இயந்திரங்கள் இன்றுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாததாக உடைந்திருந்ததுடன் அந்த உழவு இயந்திரங்கள் கமநல சேவை நிலையங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததன் காரணமாக அந்த நிறுவன வளவில் இடப்பிரச்சினைகளும் உருவாகியிருந்ததுடன் உழவு இயந்திரங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத உழவு இயந்திரங்களை கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் பெயரில் பதிவுசெய்யப்படாத 08 வாகனங்களை பொறுப்பேற்பதற்கு அல்லது உரிய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில வாகனங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் அவற்றினை பொறுபபேற்று திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்களின் பதிவு செய்துள்ள வாகனங்களுக்கு மத்தியில் 12 வாகனங்களின் உரிமை தற்பொழுது எங்கள் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வாகனங்களின் உரிமையைப் பொறுப்பேற்பதற்குரிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திணைக்களத்திற்கு உரிமை இல்லாத வாகனங்களைப் பொறுப்பேற்பதற்கு அல்லது உரிய நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| புத்தளம் மாவட்டத்தின் தரப் பரிசோதனை நிலையம் 2017 ஆம் ஆண்டின் போது புத்தளம் கமநல சேவை நிலையத்தில் | மாவட்ட கமநல அபிவிருத்தி அலுவலகத்தில் கடமையில் இரண்டு தொழில்நுட்ப | விளைவற்றுக் காணப்படுகின்ற தரக்கட்டுப்பாட்டு |

| | | |
|---|---|---|
| ஸ்தாபிக்கப்பட்டு அதற்காக ரூபா 768,698 செலவு செய்து தரக்கட்டுப்பாட்டு நிலையத்திற்கு பொருத்தமான வகையில் மறுசீரமைப்புச் செய்து அந்த ஆண்டிலேயே ரூபா 3,629,101 செலவு செய்து உபகரண இருப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தரக்கட்டுப்பாட்டு நிலையத்தில் எந்தப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படாது அந்த உபகரணம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் உபகரணங்களின் செயலாற்றலேனும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தரக்கட்டுப்பாட்டு நிலையத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உபகரணங்கள் மாவட்ட கமநல சேவை குழுவின் இருப்பேடுகளிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023 யூன் 08 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க நிர்மாண தரப் பரிசோதனை சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் தரப்பரிசோதனை நிலையத்தை செயற்படுத்துவதற்காக ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார். 2023 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது தரக் கட்டுப்பாட்டு நிலையத்திற்குரிய மண் பரிசோதனை மற்றும் மூலப் பொருள் பரிசோதனைக்காக நடாத்தப்பட்ட பயிற்சிக்காக புத்தளம் மாவட்டத்திற்காக நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினை உள்ளடக்கி இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பங்குபற்றி இருந்தனர். | உத்தியொகத்ரத்கள் மாத்திரம் ஈடுபட்டுள்ளதன் காரணமாக மற்றும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிக கடமைகளின் அடிப்படையில் இந்த தரக் கட்டுப்பாட்டினை அமுல்ப்படுத்துவது சிக்கலானதாகும். எனினும் 2025 ஆம் ஆண்டிலிருந்து இந்த கட்டுப்பாட்டு நிலையத்தை அமுல்ப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>உரிய உபகரணங்கள் மாவட்ட கமநல அபிவிருத்தி அலுவலகத்தில் பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையத்தை முறைப்படியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பதுளை மாவட்டத்திலுள்ள 03 கமநல சேவை குழுக்களின் மூன்று உத்தியோகத்தர்களால் முறைகேடாக பசளைகளை பயன்படுத்தியமை தொடர்பாக கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்த ஒழுக்காற்று கட்டளைக்கு இணங்க ரூபா 12.28 மில்லியன் பணம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு உரிய கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் அல்லது கணக்காளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேவையிலிருந்து நீக்கப்பட்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நிலைய முகாமையாரிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். நிலைய இலிகிதரிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அவரின் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்தலானது உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக்கொடை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னரே இடம்பெறும் என கமநல | ஒழுக்காற்று கட்டளையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு (பதுளை) தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க அது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | பத்மெடில்ல கமநல வங்கியில் சேவையாற்றிய கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் சம்பந்தமாக நடாத்தப்பட்ட தொடக்க புலனாய்வின் பிரகாரம் அண்ணளவாக ரூபா 5 மில்லியன் அளவான பணம் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையும் பின் தொடர் நடவடிக்கை எடுத்து உரிய பணத்தை அந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அந்த உத்தியோகத்தர் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டிருந்தார். கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/2/15/உ.ச/பதுளை ஆம் இலக்க 2022 ஒக்தோப்ர 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்த உத்தியோகத்தருக்கு 2019 மே 03 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தும் வகையில் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சேவையின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வும் வழங்கப்பட்டிருந்தது. | பத்மெடில்ல கமநல முன்னொடி செயற்திட்டத்தில் இடம்பெற்றுள்ள பண ஒழுங்கீனம் சம்பந்தமாக தொடக்க புலனாய்வினை மேற்கொள்வதற்காக நுவரெலியா அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் தொடக்க புலனாய்வு அறிக்கையை பெற்ற உடன் உரிய மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | பணத் துஸ்பிரோயகம் சம்பந்தமான தொடக்க புலனாய்வு நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | தகவல் முகாமைத்துவ பிரிவின் கீழ் டிஜிடல் வயல் காணி பதிவேட்டினை திருத்தம் செய்தல் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இன்று வரை முடிவடைந்திருக்கவில்லை. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வயல் காணிகளை வகைப்படுத்தி அடையாளங்காண முடியாததுடன் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 2024 ஆம் ஆணடின் இறுதி வரை நாட்டிலுள்ள 24 மாவட்டங்கள் தொடர்பாக 145 கமநல சேவை நிலையங்களின் 410 கமத்தொழில் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவுகளிலுள்ள வயல் காணிகள் தொடர்பாக தகவல் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 14,021 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தொடர்பான 10,400 கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளுக்கு மத்தியில் 410 பிரிவுகளின் புள்ளிவிபங்கள் மாற்றமடைதல்கள் மற்றும் பொருத்தமின்மைகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. அது தொடர்பாக ஆய்வு செய்து முரண்பாடுகள் காணப்படுகின்ற பிரிவுகளின் பட்டியலை தயாரித்து முறைமையில் தற்பொழுது காணப்படுகின்ற தரவுகளின் இடத்தை வரிசைப்படுத்துவதற்கு பாதிப்பு ஏற்படாத வயைகில் முறைமைக்குள் மீண்டும் நாளதுவரையாக்குவதற்காக முறைமைகளின் உருவாக்கம் | டிஜிடல் வயல் காணி பெயர்ப்பதிவேட்டினை திருத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் அபிவிருத்தி செய்தல் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த சரிசெய்தல் செயற்பாடு தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | |
| (ஈ) | குருனாகல் மாவட்டத்திலுள்ள 23,558 விவசாயிகளால் நெற்செய்கை மேற்கொள்ளுகின்ற 16,998 ஏக்கர் வயல் காணிகளுக்கு பாசனம் வழங்குகின்ற அணைகளின் எண்ணிக்கை 1,222 ஆனதுடன் 16 கமநல சேவை நிலையங்களுக்குரிய அவற்றில் செயற்பாடற்ற நிலையில் உள்ள 100 அணைகள் கைவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் 12 அணைகள் மற்றும் அவை தொடர்பான கால்வாய்களை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் செயற்பாடற்ற நிலையில் உள்ள அணைகளை செயற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட்டிருக்கவில்லை. ய | குருனாகல் மாவட்ட கமநல சேவை அதிகாரப் பிரதேசம் ஐம்பத்து ஆறு நிலையங்களை உள்ளடக்கியுள்ளதுடன் அனைத்து கமநல சேவை நிலையங்கள் தொடர்பான புனரமைப்பு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அந்த அனைத்து பரேரணைகளையும் அமுல்ப்படுத்துவதற்கு போதியளவு பணம் ஒதுக்கீடு செய்யப்படாததனால் 2024 ஆம் ஆண்டில் குருனாகல் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் தேவைப்பாடு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் மேறகொள்ளப்பட்ட வேண்டிய அத்தியவசியமான செயற்திட்டங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. | முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்து உரிய புனரமைப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (உ) | குருனாகல் மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கை மற்றும் ஏனைய கமத்தொழில் பயிர்செய்கைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள 4,765 விவசாயக் கிணறுகளில் 513 கிணறுகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அவற்றினை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுககப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு சந்தர்ப்பங்களில் கமநல சேவை நிலைய மட்டத்தில் தகவல்களைப் பெற்றுக்கொள்கையில் இந்த அளவு காட்டப்பட்டிருந்தும் புனரமைப்பு பிரேரணைகளாக விவசாயக் கணிறுகள் தொடர்பான பிரேரணை நிலைய மட்டத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய விவசாயக் கிணறுகளை அடையாளங்கண்டு புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய 07/2018 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க 2015/2017 ஆண்டுகளில் அமுல்ப்படுத்தப்பட்ட கமத்தொழில் காணிப் (வயல்கள்) பதிவேட்டினை திருத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது மீண்டும் ஒரு தடவை நெற்பயிர்ச் செய்கை செய்யக்கூடிய காணிகளை நிலமீட்புச் செய்வதற்கு/ கமத்தொழில் இல்லாத வேறு செயற்பாடுகளுககு | 2023-03-07 ஆந் திகதி கமத்தொழில் தொடர்பான பாராளுமன்ற ஆலோசனை குழுக் கூட்டத்தின் போது 2023-03-08 ஆந் திகதியிலிருந்து வயல் காணிகளில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதனைத் தவிர்த்து ஏனைய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பான 7/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | வயல் காணிகளை மேடாக்குவதற்கு அனுமதி வழங்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்படாதிருக்க வேண்டிய A தரத்திலுள்ள தரிசு நிலங்களாக அடையாளங்காணப்பட்டிருந்த கொழும்பு மாவட்டத்திலுள்ள 548.05 பேச்சர்ஸ் வயல் காணிகள் மேற்கூறிய சுற்றறிக்கை ஏறபாடுகளுக்கு முரணாக ஏனைய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு அல்லது மேடாக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மேற்கூறிய தீர்மானத்தின் மூலம் வயல் காணிகளின் வகைகளை திருத்தம் செய்வது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள 6/2018 மற்றும் 4/2019 ஆம் இலக்க சுற்றறிக்கைகளை இரத்துச் செய்தல் செய்யப்படாததனால் மேற்கூறிய சுற்றறிக்கையின் கீழ் கிடைத்துள்ள சிபாரிசுகள் சம்பந்தமாக கவனித்துப் பார்த்து 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்திய) அதிகாரச் சட்டத்தினால் திருத்திய 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வயல் காணிகளை ஏனைய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவது தொடர்பாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | |
| (எ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டிற்கு இணங்க கமநல குழுவின் அதிகாரம் கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி மற்றும் உதவி ஆணையாளரின் 2024 மே 03 மற்றும் 04 ஆந திகதிகளின் போது நடைபெறற கருத்தரங்கிற்கு நுவரெலியா கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் 2024 ஏப்ரல் 22 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கமநல சேவை குழுவின் கடமைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இணக்கமற்ற கருத்தரங்கின் செலவுகளை மேற்கொள்வதற்காக ரூபா 945,000 தொகை 12 கமநல சேவை நிலையங்களினாலும் விவசாயிகள் அமைப்பின் மூலம் ரூபா 200,000 தொகையும் தனியார் கம்பனிகளின் மூலம் ரூபா 378,000 தொகையும், விதுலிபுர கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் | உண்மையாகவே கூட்டத்தை நடாத்துவதற்கு வழங்கிய பணம் எனவும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். | கமநல சேவை நிலையங்களின் அதிகாரம், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்றவர்களுக்கு செலவு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விவசாயிகளிடமிருந்து தனிப்பட்ட ரீதியாக ரூபா 30,000 தொகையுமாக முழுப்பெறுமதி ரூபா 1,553,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | குருனாகல் மாவட்டத்தில் உள்ள முழு குளங்களின் எண்ணிக்கை 5,636 இல் 24 கமநல சேவை நிலையங்கள் தொடர்பாக பயன்பாட்டிறகு எடுத்துக்கொள்ள முடியாது செயற்பாடற்று உள்ள 149 குளங்கள் கைவிடப்பட்டிருந்தும் அக்குளங்களின் கீழுள்ள 108,413 ஏக்கர் வயல் காணிகள் பாசனம் பெறுவதுடன் விவசாயிகளின் எண்ணிக்கை 125,063 ஆகும். எவ்வாயினும் மீளாய்வாண்டில் கைவிடப்பட்டுள்ள 02 குளங்களை மாத்திரம் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 147 குளங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைவிடப்பட்ட குளங்கள் அதிக அளவில் காணப்பட்டிருந்தும் புனரமைப்புச் செய்வதற்காக கிடைத்துள்ள நிதி ஏற்பாடு அந்த அனைத்து குளங்களையும் புனரமைப்புச் செய்வதற்கு போதியதாக இல்லாததனால் தேவைப்பாடு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் உரிய புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | முன்னுரிமையின் அடிப்படையில் குளங்கள் புனரமைப்புச் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஐ) | திணைக்களத்தின் 482 கமநல சேவை நிலையங்களுக்குரிய காணிகள் மற்றும் 74 கமநல நிலையங்களுக்குரிய கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகள் மற்றும் கட்டிடங்களை பொறுப்பேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

**5. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | குருனாகல் மாவட்டத்தில் கைவிடப்பட்ட குளங்களை புனரமைப்புச் செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இப்பாவல குளத்தை புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 8.15 மில்லியன் 2024 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்டிருந்தது. அக்குங்களை புனரமைப்புச் செய்யும் வேலைத்தளத்திற்கு எடுத்துச் சென்ற நியம தரம் அற்றது என தரப்பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்ட 21 கியூப் மணல் மீண்டும் திருப்பி எடுத்துச் செல்லப்பட்டது எனவும் அதற்காக நியம தரத்தைக் கொண்ட மணல் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் வேலைத்தளத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மூலப் பொருட்களின் தரம் பரீட்சிக்கப்பட்டது எனவும் குளத்தின் அணைக்கட்டிற்காக | குருனாகல் மாவட்டத்திலுள்ள இப்பாவல குளம் பாளு குளம், வரா குளம் என்பவற்றிற்காக ஈடுபடுத்தப்பட்ட கொங்கிரீட் கலவைகளின் தரம் மற்றும் சுருக்க வலிமை தொடர்பாக பரீட்சித்து அறிக்கையிடுமாறு பணிப்பாளருக்கு (பொறியியலாளர்) தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க பெற்ற அறிக்கையில் மேற்கூறிய கொங்கிரீட் கலவைகளின் தரம் மற்றும் சுருக்க வலிமை போதியளவில் காணப்படுகின்றது எனவும் மண்ணின் Compaction பெறுமதியும் தேவைப்படும் | குளங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் நிர்ணயிக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்பட்டுள்ள குளத்திலுள்ள மண்ணின் தரம் பரீட்சிக்கப்பட்டது எனவும் கொங்கிரீட்டினை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட வான்கதவுகள் மற்றும் நீர் வெளியேறும் கால்வாய்களில் ஈடுபடுத்தப்பட்ட கொங்கிரீட்களின் தரம் பரீட்ச்சிக்கப்பட்டது எனவம் உரிய பரீட்சிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படாததுடன் குளத்து அணைகட்டுகளில் ஒரு பகுதிக்கு மாத்திரம் புற்கள் பதிக்கப்பட்டிருந்தமை மற்றும் புனரமைப்புச் செய்யும் போது அகற்றப்பட்ட 918 கியூப் மண்ணை கொள்வனவு செய்த நபரினால் எடுத்துச் செல்லப்படாது குளத்தினுள் 04 இடங்களில் மலைபோல குவிக்கப்பட்டிருந்ததனால் அவை மீண்டும் குளத்திற்குள் சேர்வதற்கு வாய்ப்பு உள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. | பெறுமதியில் காணப்படுகின்றது எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.<br><br>இப்பாவல குளத்தின் அணைக்கட்டிற்கு புற் கற்றைகள் வரா குளத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்டது எனவும் அதிக மழையின் காரணமாக புற்கற்றைகளை வழங்குதல் சிக்கலடைந்துள்ளது. அவ்வாறே தற்பொழுது புற்கற்றைகள் பிடிக்கப்பட்ட பிரதேசத்திற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டது எனவும் மண் ஏலமிடப்பட்டதன் பின்னர் அதிக மழையின் காரணமாக கொள்வனவு செய்தவருக்கு அந்த மண்ணை அகற்றுவதற்கு முடியாதுள்ளது. கொள்வனவு செய்தவருக்கு அந்த மண்ணை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பாளு குளத்தின் மண் ஏலமிடப்பட்டுள்ளதுடன் கொள்வனவு செய்தவரினால் மண்ணை அகற்றி முடிவடைவதற்கு முன்னர் மழை ஆரம்பித்துள்ளதன் காரணமாக மண் அந்த குளத்தின் மீது குவிக்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்தவருக்கு அந்த மண்ணை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | குருநாகல் மாவட்டத்தில் கைவிடப்பட்ட குளங்களை புனரமைப்புச் செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாளு குளத்தை புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 5.93 மில்லியன் 2024 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்டிருந்தது. குளத்தை புனரமைப்புச் செய்யும் போது கமநல அபிவிருத்தி ஆணையாளரின் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பாசன வயல் காணிகளின் அளவு ஆகக் குறைந்தது 20 ஏக்கர்களாகவேனும் இருக்க வேண்டிய போதிலும் இந்த குளத்தின் கீழுள்ள வயல் காணிகளின் அளவு 13 ஏக்கர்கள் ஆனதுடன் அறுவடையின் போது 09 | குருநாகல் மாவட்டத்தில் இப்பாவல குளம், பாளு குளம் மற்றும் வரா குளத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட கொங்கிரீட் கலவைகளின் தரம் மற்றும் சுருக்க வலிமை தொடர்பாக பரீட்சித்து அறிக்கையிடுமாறு பணிப்பாளருக்கு (பொறியியலாளர்) தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க பெற்ற அறிக்கையில் மேற்கூறிய கொங்கிரீட் கலவைகளின் தரம் மற்றும் சுருக்க வலிமை | குளத்தை புனரமைப்புச் செய்யும் போது நிர்ணயிக்கப்பட்டவாறு மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏக்கர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. குளத்து அணைக்கட்டிற்காக குளத்தின் மண் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் தர நிலைமை பரீட்சிக்கப்பட்டது என்பதற்கான தகவல்கள் சமரப்பிக்கப்படவில்லை. குளத்தின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டவாறு அடையாளங்காணப்பட்டிருக்காததுடன் பழைய குளத்து அணைக்கட்டிற்கு மண் போடப்பட்டு தயார் படுத்தப்பட்டிருந்ததனால் வெளியேற்றும் கால்வாயின் மூலம் நீர் வெளியேறுவதற்கு முன்னர் குளத்து அணைக்கட்டின் மூலம் நீர் வெளியாகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. குளத்தில் அகற்றப்பட்ட மண் குளத்திற்குள் குவிக்கப்பட்டிருந்ததனால் மண் குளத்திற்குள் மீண்டும் ஒன்று சேர்ந்து காணப்பட்டது. | போதியளவில் காணப்படுகின்றது எனவும் மண்ணின் Compaction பெறுமதியும் தேவைப்படும் பெறுமதியில் காணப்படுகின்றது எனவும் சிபாரிசு செய்யப்பட்டுளளது.<br><br>இப்பாவல குளத்தின் அணைக்கட்டிற்கு புற் கற்றைகள் வரா குளத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்டது எனவும் அதிக மழையின் காரணமாக புற்கற்றைகளை வழங்குதல் சிக்கலடைந்துள்ளது. அவ்வாறே தற்பொழுது புற்கற்றைகள் பிடிக்கப்பட்ட பிரதேசத்திற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டது எனவும் மண் ஏலமிடப்பட்டதன் பின்னர் அதிக மழையின் காரணமாக கொள்வனவு செய்தவருக்கு அந்த மண்ணை அகற்றுவதற்கு முடியாதுள்ளது. பாளு குளத்தின் மண் ஏலமிடப்பட்டுள்ளதுடன் மழை ஆரம்பித்துள்ளதன் காரணமாக மண் அந்த குளத்தின் மீது குவிக்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்தவருக்கு அந்த மண்ணை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | நிலைபேறான வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சிட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல் மற்றும் அதனை நிலையாக பேணுவதனை இலக்ககாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக குருனாகல் மாவட்டத்திற்கு ரூபா 45.76 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூபா 16.63 மில்லியன் விதை மற்றும் நடுகைப் பொருட்களுக்காக செலவு செய்யப்பட்டு மிகுதியான ரூபா 29.13 மில்லியன் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கிடைத்த நிதி ஏற்பாட்டில் 64 சதவீதம் பயன்படுத்தப்படாது திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. குருனாகல் மாவட்டத்தில் இலக்கிடப்பட்ட வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கை 21,200 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வீட்டுத் | பதில் வழங்கப்படவில்லை. | நிதி ஏற்பாட்டிலிருந்து எதிர்பார்த்த இலக்கினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தோட்டத்தினை அமைப்பதற்காக விதை மற்றும் நடுகைப் பொருட்களை வழங்கிய வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கை 6,299 ஆக இருந்ததனால் வீட்டுத் தோட்டத்தினை அமைக்கும் செயல்முன்னேற்றம் 30 சதவீதம் ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இந்த வீட்டுத் தோட்டங்களும் 2025 சனவரி 31 ஆந் திகதி வரையும் நிகழ்கால செயல் முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வீட்டுத் தோட்டங்களை சரியாக அடையாளங்காணல், பராமரித்தல், மற்றும் வீட்டுத் தோட்டத்தை வெற்றிகரமாக பேணுதல் சம்பந்தமாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், வீட்டுத் தோட்ட நடவடிக்கைகளில் இடையூறு ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை உத்தியோகத்தர்களால் எடுக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக செலவு செய்யப்பட்ட ரூபா 16.63 மில்லியன் தொகை ஒரு விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

## 6. மனிதவளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 19,764 ஆனதுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 13,484 ஆக இருந்ததனால் அந்த 6,280 வெற்றிடங்களை மீண்டும் மீளாய்வு செய்து சேர்த்துக்கொள்வதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கணக்காய்வு அவதானிப்பு சரியானதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு முயற்சி எடுக்கப்படும். | வெற்றிடங்களை மீண்டும் மீளாய்வு செய்து சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | பொதுஹர சேதனப் பசளையை மேம்படுத்துதல் செயற்பாட்டுப் பிரிவு என்ற பெயரில் 2020 யூன் 10 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட பிரிவு 2022 ஆம் ஆண்டிலிருந்து தகவல் முகாமைத்துவ பிரிவாக பெயரிடப்பட்டதுடன் திணைக்களத்தின் அனைத்து டிஜிடல் மயப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை செயற்படுத்துதல் இப்பிரிவின் பிரதான செயற்பாடாக | அங்கீகரித்த ஆளணியினரை நியமிப்பதற்கு வேண்டுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் பொதுஹர தகவல் முகாமைத்துவ பிரிவினை உள்ளடக்கி திணைக்களத்தின் பல பிரிவுகளுக்கு தகமைபெற்ற உத்தியோகத்தர்கள் இல்லாததன் காரணமாக அதற்காக புதிய ஆளணியினர் அளவினை | உரிய செயற்பாடுகளுக்காக தகமை பெற்ற உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்து இணைத்துக் கொள்ள வேண்டும். |

இருந்த போதிலும் அதற்காக தகமைபெற்ற உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்ட ஆளணியை அங்கீகரித்துக் கொள்ளாது ஆரம்பத்திலிருந்து இன்றுவரை அவ்வப்போது இணைத்துக்கொள்ளப்பட்ட ஆளணி 19 நபர்களை உள்ளடக்கியிருந்தது.

அங்கீகரித்துக்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியிருந்தும் அதற்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை. அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு தற்காலிக உத்தியோகத்தர் குழு இணைத்துக்கொள்ளப்பட்டு திணைக்களத்தின் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன.